2013 மே 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 386, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

386—

மேம்பாலம் கட்டுதல்

***19973—திரு. இரா. குமரகுரு:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உளுந்தூர்பேட்டை தொகுதி, கெடிலம்-பெரும்பட்டில் கெடிலம் ஆற்றின் குறுக்கே நபார்டு திட்டம்மூலமாக மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

உளுந்தூர்பேட்டை தொகுதி, கெடிலம்-பெரும்பட்டு சாலையில் உள்ள கெடிலம் ஆற்றின் குறுக்கே நபார்டு வங்கி உதவியுடன் மேம்பாலம் அமைக்க பரிசீலிக்கப்பட்டுவருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.*

திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட திருநாவலூர் ஒன்றியத்தில், கெடிலம், பெரும்பட்டு கிராமங்களின் அருகே, கெடிலம் ஆற்றின் குறுக்கே தரைப்பாலம் உள்ளது. அங்கே மழைக் காலங்களின்போது வெள்ளம் ஏற்படுவதால், அதைச் சுற்றி இருக்கும் கிராம மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நபார்டு வங்கிமூலமாக பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக முதலில் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைச் சுற்றியுள்ள கிராம மக்கள், பெரும்பட்டு கிராமத்திலே இருக்கின்ற தரைப் பாலத்தை மேம்பாலமாக உயர்த்த வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, இந்த வருடமே நபார்டு வங்கித் திட்டத்தின் மூலமாக, அந்த மக்களின் நீண்டநாள் கோரிக்கையான அந்த மேம்பாலத்தைக் கட்டித் தருவதற்கு ஆணை வழங்குவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டை தொகுதி, கெடிலம்—பெரும்பட்டு சாலையிலுள்ள, கெடிலம் ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்ட கோரப்படும் இடமானது தேசிய நெடுஞ்சாலை எண் 45—ல் வலது புறம் கி.மீ. 185.8—ல் பிரிந்து மாநில நெடுஞ்சாலை எண் 69—விருத்தாசலம்—உளுந்தூர்பேட்டை—விழுப்புரம் சாலையினை இணைக்கும் இணைப்புச் சாலை கி.மீ. 5/10—ல் கெடிலம் ஆறு குறுக்கிடும் இடத்தில் அமைந்துள்ளது. இந்த இணைப்புச் சாலையின் மொத்த நீளம் 8 கி.மீ. ஆகும். இதில், கி.மீ. 0/0—லிருந்து 4/0 மற்றும் 5/8 லிருந்து 8/0 ஆகிய பகுதிகள் திருநாவலூர் ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் உள்ள சாலைப் பகுதிகளாகும். இடைப்பட்ட கி.மீ. 4/0 முதல் 5/8 வரை நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் உள்ள மாவட்ட இதர சாலையாகும். பாலம் அமைக்க கோரப்பட்டுள்ள இடம் கி.மீ. 5/10—திருநாவலூர் ஊராட்சி ஒன்றிய பராமரிப்பில் உள்ளதால் ஊரக வளர்ச்சித் துறையின் தடையின்மைச் சான்று பெற்று, அரசின் நிதி நிலைமைக்கேற்ப நபார்டு வங்கியின் கடனுதவியுடன் இப்பாலம் அமைக்கப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.*

திரு. இரா. குமரகுரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நபார்டு வங்கித் திட்டத்தின்மூலமாக இந்த வருடமே பரிசீலிக்கப்படும் என்று சொன்னதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும் தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 387, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

387—

நெல் சேமிப்புக் கிடங்கு

***2913—திருமதி எஸ். கணிதா சம்பத்:** *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மதுராந்தகம் தொகுதி, மாமண்டூரில் நெல் சேமிப்புக் கிடங்கு அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுராந்தகத்தில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்குச் சொந்தமான 6,000 மெட்ரிக் டன் கொள்ளளவில் நவீன முறைப்படி கட்டப்பட்டுள்ள சேமிப்புக் கிடங்கு இயங்கி வருகிறது. இது மாமண்டூருக்கு அருகில் சுமார் 18 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. சேமிப்புக் கிடங்குகளைப் பயன்படுத்தக்கூடிய தனியார், அரசு மற்றும் கூட்டுறவு சரக்கு வைப்பாளர்கள் மாமண்டூர் பகுதியில் குறைவாக இருப்பதால் தனியாக நெல் சேமிப்புக் கிடங்கு அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை என்பதனைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.*

திருமதி எஸ். கணிதா சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரியைப் பெற்றுத் தந்த காவியமே, வீரத்தின்*